## மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிமன்றம், சேலம்

முன்னிலை - திரு.வே.புகழேந்தி, இளநிலைச் சட்டம்,
மாவட்ட நீதிபதி

**2025–ஆம் ஆண்டு நவம்பர்திங்கள் 07–ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2056 ஐப்பசித் திங்கள் 21–ஆம் நாள்**

**முதலேற்பு வழக்கு எண்.305/2018 –ல்**
**வழக்கிடை விண்ணப்ப எண்.02/2024**

**01. இளவர் அபிசேக்**
**02. இளவர் மதுமிதா**
**அடுத்த நண்பர்/பாதுகாவலர் தாயார் ஜெயலட்சுமி**
**03. இளவர் மோனிகா**
**04. இளவர் காவியா**
**05. இளவர் தர்சித்**
**அடுத்த நண்பர்/பாதுகாவலர் தாயார் சத்தியா**

**.. மனுதாரர்கள்/ உத்தேச 6–10 பிரதிவாதிகள்**

**–எதிர்–**

**01. வெங்கடேஷ் ... 01–ஆம் எதிர்மனுதாரர்/வாதி.**

**02. அன்னையன்**
**03. இலட்சுமி**
**04. யுவராஜ்**
**05. ராதா**
**06. மோகன் ... 02–06 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்.**

இம்மனு இன்று இறுதிவிசாரணைக்கு வந்தபோது மனுதாரர்களுக்காக வழக்குரைஞர் **திரு.N.P.கிருஷ்ணன்** அவர்களும் எதிர்மனுதாரர்களுக்காக வழக்குரைஞர் **திரு.V.இரவீந்திரன்** அவர்களும் தோன்றி எடுத்துரைத்த வாதங்களை கேட்டும் வழக்குக் கோப்புகளை பரிசீலித்தும் இந் நாள்வரை நிலுவையில் இருந்துவந்த இந்த மனுவில் இந்த நீதிமன்றம் இன்று ஆணை பிறப்பிக்கிறது.

IIIrd ADJ Court, Salem

## ஆணையுரை

மனுதாரர்களை முதலேற்பு வழக்கில் 06 முதல் 10 வரையிலான பிரதி-வாதிகளாக சேர்க்க அனுமதி அளிக்கக் கோரி உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 01-ஆம் வகுமுறையின் 10-ஆம் விதியின்கீழ் இந்த மனு தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

### மனுவின் சுருக்கம்

01. மனுதாரர்கள் முதலேற்பு வழக்கைப் பொறுத்தவரை 03-ஆம் நபர் ஆவர். வழக்குச் சொத்தைப் பொறுத்து பாகப்பிரிவினை கோரி மனுதாரர்கள் தாக்கல்செய்த முதலேற்பு வழக்கு எண் 221/2018 வழக்கு சேலம் 01-ஆம் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது. அந்த வழக்கில் இந்த வழக்கின் வாதியும் பிரதிவாதிகளும் தரப்பினராக உள்ளனர்.

02. மனுதாரர்கள் தொடுத்த மேற்சொன்ன வழக்கு நிலுவையில் இருந்துவரும் நிலையில் அந்த வழக்கு நடவடிக்கையில் உள்ள சொத்து சம்மந்தமாக 01-ஆம் எதிர்மனுதாரர்/வாதியும் 02 முதல் 06 எதிர்மனுதாரர்-கள்/பிரதிவாதிகளும் கூட்டுச்சதியுடன் ஏற்றதை ஆற்றுக நிவாரணத்திற்கு இந்த வழக்கைத் தொடுத்தனர். இந்த வழக்குத் தொடர்ந்து நடத்தப்பட்டால் வாதியும் பிரதிவாதிகளும் கூட்டுச் சேர்ந்து மனுதாரர்களின் உரிமையை வீழ்த்தும் விதத்தில் தீர்ப்பாணை பெற வாய்ப்புள்ளது. ஆகையால், மனுதாரர்களை இந்த வழக்கில் பிரதிவாதிகளாக சேர்த்து ஆணையிட வேண்டும்.

III ADJ Court, Salem

## எதிருரையின் சுருக்கம்

03. மனுதாரர்கள் இந்த வழக்கிற்கு அவசியமான தரப்பினரோ தேவையான தரப்பினரோ இல்லை. வழக்குச் சொத்து உட்பட 3.28 ஏக்கர் நிலம் 01-ஆம் பிரதிவாதியின் தனிபட்டச் சொத்து ஆகும். அதில் ஒரு ஏக்கர் நிலத்தை 08.10.2015-ஆம் நாள் வாதியின் மகனுக்கு விற்றார். வழக்குச் சொத்துமீது மனுதாரர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை. முதலேற்பு வழக்கு எண் 221/2018-ஐ மனுதாரர்கள் பொய்யாக தொடுத்துள்ளனர். மனுதாரர்கள் இந்த வழக்கிற்கு தேவையான தரப்பினரோ அவசியமான தரப்பினரோ இல்லை. யாரை பிரதிவாதியாக சேர்த்து வழக்கிடுவது என்பதை முடிவுசெய்யும் உரிமை வாதிக்கு மட்டுமே உள்ளது. ஆகையால், இந்த மனுவை தள்ளுபடிச் செய்ய வேண்டும்.

## தீர்வுகாண வேண்டிய விவாதக்கூறுகள்

04. **இந்த மனு அனுமதிக்கத்தக்கதா?**

## தீர்முடிவு

05. இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்குக் கோப்புகள் ஓர்வுசெய்யப்பட்டன. வழக்குச் சொத்தைப் பொறுத்து வாதிக்கும் பிரதிவாதி -களுக்கும் இடையே ஏற்பட்டதாக சொல்லப்படும் 07.10.2018-ஆம் தேதியிட்ட விற்பனை ஒப்பந்தப்படி ஏற்றதை ஆற்றுக நிவாரணம் கோரி வாதியால் முதலேற்பு வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது. மனுதாரர்களுக்கும் 01-ஆம் எதிர்மனுதாரர்/ வாதிக்கும் நேரடியாக எந்தத் தொடர்பும் இல்லை.

IIIrd ADJ Court, Salem

06. இந்த வழக்கிலுள்ள விடையத்தைப் பொறுத்தவரை மனுதாரர் -களுக்கு எந்தவித சம்மந்தமும் இல்லை. இந்த வழக்கைப் பொறுத்தவரை மனுதாரர்கள் அவசியத் தரப்பினரோ தேவையான தரப்பினரோ இல்லை. 01-ஆம் எதிர்மனுதாரர்/வாதி சொல்வதுபோல் யார் மீது வழக்கிடுவது என்பதை முடிவுசெய்யும் உரிமை வாதிக்கே உள்ளது. வழக்குச் சொத்துமீது மனுதாரர்களுக்கு உரிமை உள்ளதா? இல்லையா? என்பது சம்மந்தமாக மனுதாரர்கள் தொடுத்த வழக்கிலேயே தீர்வுகாண முடியும். அதில் இந்த வழக்கின் தரப்பினர்களும் பிரதிவாதிகளாக உள்ளனர் என்று தெரிகிறது. இந்த வழக்கில் பிரதிவாதிகளாக தங்களை சேர்க்கக் கோரும் மனுதாரர்கள் யாருக்கு எதிராக தங்களது நிவாரணத்தைக் கோருவார்கள்? இருவருக்கும் எதிராக கோருவார்களா? என்ற கேள்விகள் எழுகின்றன. இந்த வழக்கைப் பொறுத்தவரை மனுதாரர்கள் அவசியத் தரப்பினரோ தேவையான தரப்பினரோ இல்லை என்று இந் நீதிமன்றம் முடிவு செய்கிறது.

## இறுதிமுடிவு

07. இறுதியாக, இந்த மனு தள்ளுபடிச் செய்யப்படுகிறது

**இந்த ஆணையுரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025–ஆம் ஆண்டு நவம்பர்திங்கள் 07–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.**

**(ஒப்பம்)வே.புகழேந்தி**
**மூன்றாம் கூடுதல் மாவட்ட /அமர்வு நீதிபதி,**
**சேலம்.**

**இணைப்பு:–** இல்லை



III rd ADJ Court, Salem